தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகை அதிகமாகிவிட்ட காரணத்தால் 70 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வரக்கூடிய தண்ணீர் போதுமான அளவுக்கு அந்தப் பகுதிக்கு வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி பகுதிகளுக்குப் போதிய தண்ணீர் வருவதற்கு கூடுதலாக வசதிகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதையும் கருமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது நீண்டகாலத்திற்கு முன்பு போடப்பட்டது. அதிலே 11 பஞ்சாயத்துகள் திருமங்கலம் ஒன்றியத்தில் இருக்கின்றன. அதற்கும் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களிலும் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுவது 38.95 விழுக்காடுதான். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் மட்டும்தான் 93.47 விழுக்காடு இன்றைக்கு குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

339—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***47211—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 5

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். பல்லாண்டு காலமாக தமிழகத்தில் சென்னையிலும், நாமக்கல்லிலும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் மட்டும் இருந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, 2012 ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளை, தஞ்சாவூரில் ஒரத்தநாட்டிலும், திருநெல்வேலியில் அபிஷேகப்பட்டியிலும் வழங்கி சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது இரண்டு கல்லூரிகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், சேலம் மாவட்டத்திற்குப் பக்கத்திலே, நாமக்கல் மாவட்டத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி இருப்பதால், சேலத்தில் புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னி நதியை மீட்டெடுத்த புரட்சித் தாய், மின் வெட்டு துயரிலிருந்து மீட்டெடுத்தார் தமிழகத்தை. முல்லைப் பெரியாறு உரிமைகளை வென்றெடுத்த முழு மதியாம் நம் அம்மா. மு.க. விதைத்த இருளையும் முடித்து வைத்தார் மூன்றே ஆண்டில். சித்திரையை மீட்டெடுத்த செந்தமிழர் குல தெய்வம் நம் அம்மா. மு.க. செய்த பிழையை தன் உழைப்பால் சரி செய்து மின் மிகை மாநிலமாய் மீண்டும் மீட்டெடுத்தார் தமிழகத்தை. (மேசையைத் தட்டும் ஒலி) என்.எல்.சி. பங்குகளை ஏழைகளுக்கு உரிமையாக்கிட நெய்வேலிக்கே வேலி போட்ட நிகரில்லா அன்னையே. மின் தடைக்கும் விடை கொடுத்தார், மீட்டெடுத்தார் தமிழகத்தை. கருணாநிதி விதைத்த இருள், காவியத் தாயின் கண் துஞ்சா

2014 ஆகஸ்ட் 5]

உழைப்பாலே காலாவதி ஆனது. கருணாவால் இருண்டு கிடந்த தமிழ் மண்ணுக்கு விவேகமிகு தாயின் உழைப்பு வெளிச்சத்தைத் தந்தது. மு.க.வால் முடமாகிய மின் வாரியம் முன்னிலைக்கு வந்தது. இல்லை இனி மின் வெட்டு, நிகரில்லாத் தாயாலே இல்லங்கள்தோறும் நிம்மதி உதித்தது. அறிவிக்கப்பட்ட, அறிவிக்கப்படாத மின் தடையை அடியோடு சாய்த்தது, அன்னையின் தமிழ் மண்ணில் புத்தொளி அழகோடு பூத்தது. மு.க. விதைத்திட்ட மின் வெட்டை மூன்றே ஆண்டில் முடித்து வைப்பேன் என்று எடுத்திட்ட சபதத்தை எள்ளளவும் குன்றாது (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய் நிறைவேற்ற, பார் போற்றும் தமிழகத்தில் வெளிச்சம் படர்ந்தது. மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழ்நாடு கோழி இன உற்பத்தியிலும், முட்டை உற்பத்தியிலும் இரண்டாவது இடம் வகிக்கிறது. மேலும் சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் கோழி இன உற்பத்தி மற்றும் கால்நடைகளின் வளர்ப்பு மிகவும் அதிகமாக உள்ளது. இதுமட்டுமல்லாமல் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் மேற்சொன்ன மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. மேலும், முன்பெல்லாம் கால்நடை மருத்துவப் படிப்பிற்கு பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று இருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் வழங்கப்பட்டுள்ள திட்டங்களினால் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாக தற்போது கால்நடை மருத்துவப் படிப்பிற்கு வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்துகொண்டே போகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மட்டும் சுமார் 18 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால், கால்நடை மருத்துவப் படிப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையோ 280. எனவே, சேலம் மாவட்டத்தில் மேலும் ஒரு

கால்நடை மருத்துவக் கல்லூரியை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று அமைத்துக் கொடுப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று சொன்னால், இந்திய கால்நடை மருத்துவ அறிவியல் பேரவையின் அனுமதியைப் பெற வேண்டும். அதுமட்டுமல்ல, அதற்கு ஏறக்குறைய 100 ஏக்கருக்கு மேல் நிலம் வேண்டும். அருகில் பண்ணை அமைக்கும் விதத்தில் இட வசதி இருக்க வேண்டும். இதற்கு 100 முதல் 200 கோடி ரூபாய் வரை செலவாகும். எனவே, வருங்காலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சேலம் மாவட்டம் கருத்திலே கொள்ளப்படும். இது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்த நேரத்தில் அது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 340, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

340—

சமுதாய நலக் கூடம்

***35140—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆயங்குடி ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத்